Tamil

# தகவல் கையேடு 2 - தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் (NDIS) என்றால் என்ன?

பல்லின சமூகங்களைச் சார்ந்த மக்களுக்கு பண்பாட்டுரீதியாகவும், மொழிரீதியாகவும் மாற்றுத்திறன் குறித்த மொழிபெயர்க்கப்பட்ட தகவல்களை அளிப்பதற்காக அம்பரோ காப்பு மையம் (AMPARO Advocacy) இத்தகவல் கையேடை உருவாக்கி உள்ளனர்.

தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் (NDIS) எனப்படும் மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான கவனிப்பையும், ஆதரவையும் உதவிபுரிவதற்கான ஒரு புதிய வழியாகும். இது ஓர் இலவச தேசிய திட்டமாகும். ஆதலால், ஆஸ்திரேலியா முழுவதிலும் உள்ள அனைத்து மக்களுக்கு ஒரு சீரானத் திட்டமாக இருக்கும். இத்திட்டம் 2019ஆம் ஆண்டில், நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படும். 2016ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் இத்திட்டம் குயீன்ஸ்லாந்தில் தொடங்கப்படும். தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்திலிருந்து (NDIS) உதவிபெறும் மாற்றுத் திறனாளிகள் “பங்கேற்பாளர்கள்” எனப்படுவர்.

## தகுதி:-



தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம், ஆஸ்திரேலியாவில் வாழும் மாற்றுத் திறனாளிகளுக்கும் பின்வரும் நபர்களுக்கும் உரியதாகும்.

- தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தை முதன்முதலில் அணுகும் போது 65 வயதிற்குக் குறைவானவர்களாக இருக்க வேண்டும்.
- ஆஸ்திரேலியக் குடியுரிமை அல்லது நிரந்தர குடியிருப்பாளர் அல்லது பாதுகாக்கப்பட்ட சிறப்பு வகை செல்கை வருகை இசைவைப் பெற்றுள்ள நியூசிலாந்துக் குடியுரிமையாளராக இருக்க வேண்டும்.
- வாழ்நாள் முழுவதும் தொடரக்கூடிய இயலாமையுடன் இருப்போரும் மற்றும் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாமல் உள்ள மாற்றுத் திறனாளிகள்.

இத்தகுதி பெறாத நபர்கள், ஏனைய பொருத்தமான உதவிகளைப் பெறுவதற்கு, தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தினரால் வழிவகை செய்ய இயலும்.

## விருப்புரிமை மற்றும் கட்டுப்பாடு:-

ஆஸ்திரேலியாவில் உள்ள மாற்றுத் திறனாளிகள் பலர், கடந்த காலங்களில் தங்களைச் சமுதாய வாழ்விலிருந்து விலக்கப்பட்டவர்களாக உணர்ந்தார்கள். அவர்களுக்கு அளிக்கப்படுகிற உதவி குறித்துத் தெரிவுசெய்வதில் குறைந்த விருப்புரிமைகளையேப் பெற்றிருந்தனர். தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தின் வழியாக பங்கேற்பாளர்கள் அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், அவற்றை எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் அவர்களே முடிவுசெய்ய இயலும்.

## நியாயமான மற்றும் தேவையான ஊக்குதவி:-



மாற்றுத்திறன் தொடர்பான உதவித் தொகையை தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் செலுத்தும். மேலும், ஒரு நபர் அடைய விரும்பும் குறிக்கோள்களையும், கனவுகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கும் மக்கள் மிகவும் சுதந்திரமாக வாழ்வதற்கும் உதவி புரியும்.

தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தால் (NDIS) சமுதாய, பொருளாதார வாழ்க்கையில் ஒரு நற்கூறு அமைவதற்குத் தேவைப்படும் ஆதரவுகளை பல்லின சமூகத்தினருக்கு வழங்குகிறது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

உறவுகளை ஏற்படுத்துதல் மற்றும் மற்றவர்களுடனான பிணைப்பை உணரச் செய்தல் – குடும்பம் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து இருத்தல்.

ஓய்வுநேர நடவடிக்கைகள் உட்பட சமுதாய மற்றும் சமூக நடவடிக்கைகளில் பங்கேற்றல்.

பள்ளிக்குச் செல்லுதல், படித்தல் மற்றும் பயிற்சி பெறுதல் – தொழில்துறை சார்ந்த மற்றும் வளர்கல்விக் கழகம் (TAFE) அல்லது பல்கலைக்கழகத்தில் பயிலுதல் போன்றவை.

பொதுவான அன்றாட வாழ்க்கைப் பொறுப்புகளில் - முடிவுகளை எடுத்தல், கட்டணங்களைச் செலுத்துதல் மற்றும் சிக்கல்களைத் தீர்வு செய்தல் போன்றவை.

தொடர்பாடலில் - மற்றவர்களைத் தொடர்புகொள்ளல் மற்றும் புரிந்துகொள்ளல் போன்றவை.

இடம்பெயர்வாற்றலில் - உங்கள் வீட்டை மற்றும் சமூகத்தைச் சுற்றி நடமாடுதல் அல்லது இவற்றை மேற்கொள்ள உதவும் கருவிகளைப் பெறுதல் போன்றவை.

சுய பராமரிப்பு மற்றும் சிறப்பு உடல்நலப் பராமரிப்புத் தேவைகள் - குளித்தல், ஆடை அணிதல் மற்றும் உணவு உண்ணுதல்.

உணவு தயாரித்தல் மற்றும் உங்கள் வீட்டைத் தூய்மைப்படுத்தல் போன்ற வீட்டு வேலைகள்.

வேலைவாய்ப்பு – ஒரு வேலையைக் கண்டுபிடித்தல் அல்லது வேலையில் தொடர்தல்.

## தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் (NDIS) நிதியளிக்காது

பின்வருவனவற்றிற்கு தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் (NDIS) நிதியளிக்காது:-

ஒரு நபரின் இயலாமையுடன் தொடர்பில்லாதவை.

ஒரு நபரின் அன்றாட வாழ்க்கைத் தேவைக்கு அல்லது செலவுகளுடன் தொடர்புள்ளவை.

கல்வி, நலவாழ்வு அல்லது வீட்டுவசதி போன்ற ஏனைய முகமையினால் நிதியளிக்கப்பட வேண்டியவை.

பங்கேற்பாளர்களுக்கோ, மற்றவர்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் இருப்பவை.

## மாற்றுத்திறனுடன் கூடிய குழந்தைகள்:-



மாற்றுத்திறனுடன் கூடிய குழந்தைக்குத் தொடக்க நிலையிலேயே உதவியை நீங்கள் பெறுவதற்கு, தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தால் (NDIS) உதவி பெறலாம். இத்தொடக்க நிலை உதவி, உங்களுக்கும், உங்கள் குழந்தைக்கும் ஏற்படும் இயலாமையின் நீண்டகாலத் தாக்கத்தை குறைக்க உதவலாம். இதனை “தொடக்கநிலை நடவடிக்கை” என தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் (NDIS) அழைக்கிறது.

## மாற்றுத் திறனாளிகளும் அவர்களின் குடும்பங்களும்:-

மாற்றுத் திறனாளிகளை ஆதரிக்கும் திட்டத்தை NDIS வகுப்பதில் மாற்றுத் திறனாளிகளின் விருப்பங்கள் மற்றும் முடிவுகள் உட்பட அவர்களின் தேவைகளை மையமாகக் கொண்டிருக்கிறது. குடும்பங்களின் பங்கும் மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

மாற்றுத் திறனாளிகள், தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் (NDIS) திட்டம் உதவிசெய்ய அவர்களுடைய குடும்பத்தையும் ஏனைய ஆதரவாளர்களையும் அழைக்கலாம். குடும்பத்தினருக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதற்கான வழிமுறைகள் பற்றி தேசிய மாற்றுத்திறன் காப்பீடுத் (NDIS) திட்டமிடுபவர் சிந்தித்து செயல்படுவார். தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் (NDIS) அளிக்கும் ஆதரவு, ஏனைய பொறுப்புகள் மற்றும் அவர்களுடைய சொந்த வாழ்க்கைத் திட்டங்கள் உட்பட பங்கேற்பாளர்களுடன், திட்டமிடுதலின் போது, குடும்பத்தின் பங்கையும் கருத்தில் கொள்வார்.

தெரிவிக்கப்பட்ட முடிவுகள் தெளிவாக எடுப்பதற்கு, மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களுடைய குடும்பத்தின் ஆதரவு தேவைப்படலாம். குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின், கருத்துகளுக்கும், அனுபவத்திற்கும் திட்டமிடுபவர்கள் அதற்கு அவர்கள் மதிப்பளிப்பார்கள்.

## மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால்:-

தங்களின் கேள்வியை சரியாகக் கேட்க உங்களுக்கோர் உரைபெயர்ப்பாளர் (Interpreter) தேவைப்பட்டால் அல்லது மேலும் தகவல்களை அறிய விரும்பினால், 131 450 தொலைபேசி எண்ணில் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புப் பணித்துறை (TIS) அழைத்து தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்துடன், 1800 800 110ல் இணைக்கப்பட வேண்டும் என்று கேளுங்கள்.

## நீங்கள் தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்திற்கு தகுதியுடைவரா என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது:-

நீங்கள் தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தால் (NDIS) உதவி பெறத் தகுதி உள்ளவரா என்பதை பார்க்க தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்ட (NDIS) வலைத்தளத்தில் தெரிந்துகொள்ளலாம். http://www.ndis.gov.au/ndis-access-checklist

குயீன்ஸ்லாந்தில் தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தை (NDIS) தொடங்குகிற போது, மாற்றுத் திறனாளிகளால் “அணுகல் கோரிக்கைப் படிவத்தைப்” பூர்த்தி செய்ய இயலும். இப்படிவம் காப்பிட்டுத் திட்டத்திலிருந்து ஆதரவைப் பெற முடியுமா என்பதை தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தினருக்கு (NDIS) தகவல்களை வழங்கும். இப்படிவத்தில் உங்கள் மாற்றுத்திறன், வயது மற்றும் ஆஸ்திரேலியக் குடியுரிமை/வசிப்பிடம் பற்றிய தகவல்களை வழங்கவேண்டும். படிவத்தின் நகல்கள் மற்றும் கோரிக்கைக்கு ஆதரவு வழங்குவதற்கு வேண்டிய தகவல்கள் மற்றும் ஆவணங்களின் வகை (எ.கா. மாற்றுத்திறன், வசிப்பிடம், வயது போன்றவற்றிற்கான சான்றுகள்) (பங்கேற்பாளர் பிரிவின் கீழ்) தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தின் (NDIS) வலைத்தளத்தில் உள்ளது.

## முன் திட்டமிடல்:-

மக்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி வாழ விரும்புகிறார்கள் மற்றும் இதைச் செய்ய என்ன உதவி அவர்களுக்குத் தேவை என்பதைப் பற்றி இப்போது சிந்திக்க மற்றும் திட்டமிடத் தொடங்கலாம். மக்கள் திட்டமிடல் செயற்பாட்டிற்கு அவர்கள் ஆயத்தமாக உதவுவதற்கு நிரப்ப வேண்டிய தேசிய மாற்றுத்திறன்

காப்பீட்டுத் (NDIS) திட்டமிடல் பயிற்சிப் புத்தகம் ஒன்று உள்ளது. இப்பயிற்சி புத்தகத்தின் பிரதிகள் தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்ட (NDIS) வலைத்தளத்தில் உள்ளன.

# தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் (NDIS) திட்டமிடுபவரோடு செயற்படல்:-

தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்துக்குத் (NDIS) தகுதியுடைவர் என்று உங்களை அறிவிக்கும்போது நீங்கள் ஒரு திட்டமிடல் விவரப்பேழையைப் பெறுவீர்கள். அவை, திட்டமிடல் விவரம் மற்றும் மதிப்பீட்டுச் செயல்பாட்டினை விளக்கும். திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுச் செயல்பாட்டிற்கு முன் நிரப்பப்பட வேண்டிய பங்கேற்பாளர் தகவல்கள் அதில் அடங்கும். மக்களுக்கு ஓர் மொழிபெயர்ப்பாளர் அல்லது மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்கள் போன்ற உதவி தேவை என்றால், தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டக்குழு (NDIS) உதவ முடியும். இந்தக் கூட்டங்களுக்கு ஆவணங்கள் தேவை என்றால் அவை மொழிபெயர்க்கப்பட வேண்டும் எனவும் நீங்கள் வேண்டலாம்.

தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் (NDIS) திட்டமிடுபவரைச் சந்திப்பது, தங்களின் காப்பீட்டுத் (NDIS) திட்டத்தை உருவாக்க. உங்கள் தேவை, குறிக்கோள், விருப்பம் மற்றும் நீங்கள் பெறும் ஆதரவுகளை ஆலோசிக்க தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் (NDIS) குழு உதவும். இத்திட்டத்தைப் பற்றி பலமுறை கலந்துரையாடவேண்டிய நிலை இருக்கலாம். இக்கலந்துரையாடலில் உதவியாக யாராவது ஒருவரை நீங்கள் வைத்துக்கொள்ளலாம். பிறகு இத்தகவல்களைப் பயன்படுத்தி, தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் (NDIS) தங்களின் தேவை, இலக்குகளை அடைவதற்கான மிக பொருத்தமான உதவித் திட்டத்தை உருவாக்கும்.

மேலும் தகவல்களுக்கு www.ndis.gov.au

## பொறுப்புத்துறப்பு (Disclaimer)

இத் தகவல் Amparo Advocacy Inc. யினால் உருவாக்கப்பட்டது. இதனை வெளியிட்ட நேரத்தில், இது சரியானது என்று உறுதி செய்யக்கூடிய வகையில் அனைத்து வகையான கவனத்தையும் கையாண்ட போதிலும், இக்கையேடு ஒரு பொதுவான பார்வைக்காகக் அளிக்கப்பட்டுள்ளதேயன்றி, செம்மையாக, இப்போதையதாக, அல்லது முழுமையானதாக இல்லாமல் இருக்கலாம். தனிப்பட்ட சூழ்நிலைகள் தொடர்பாக மேலும் ஆலோசனை செய்துகொள்ளப் பெரிதும் பரிந்துரைக்கப்படுகிறது.

Date: updated on 2 Aug 2016

Funded by Queensland Government

AMPARO Advocacy inc

53 Prospect Road, Gaythorne, QLD 4051
PO Box 2065, Brookside Centre, QLD 4053
www.amparo.org.au info@amparo.org.au

phone 07 3354 4900
Interpreter Service 131450